உ

கணபதிதுணை.

தஞ்சைமாநகரம்

கீழவாசலில் எழுந்தருளியிருக்கின்ற

ஸ்ரீ வெள்ளைவிநாயகர்

பதிகம், பஞ்சரத்தினம், எச்சரிக்கை, கலிவெண்பா.

இவைநான்கும்

திருவையாறு

சிவானந்தசுவாமிகள் - மாணாக்கருளொருவராகிய

தஞ்சைமாநகரம்

ந. வீரபத்திரபிள்ளை யவர்களால்

இயற்றப்பட்டு,

தஞ்சைமாநகரம்-கோட்டைக்குள்

மாஞேசியப்பாவீதி

வயித்தியலிங்கபிள்ளையவர்கள் குமாரர்

சாமிநாதபிள்ளையவர்கள்

வேண்டுகோளின்படிக்கு

தஞ்சைமாநகரம் - சதாவதானம்

சுப்பிரமணியஐயரவர்களது

சென்னை

வித்தியாவர்த்தனி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

பிரமாதி௵ மார்கழி௴

உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

தஞ்சைமாநகரம் - சதாவதானம்

ம - ௱ - ௱ - ஸ்ரீ

சுப்பிரமணிய ஐயரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

இருநான்குதிசைபுகழுந் தஞ்சைவெள்ளைக்களிற்றின்றே
ளிற்சொற்கள்ப
கருநான்கினூற்பதிகம் பஞ்சரத்நமெச்சரிக்கை
கலிவெண்பாவா
மொருநான்குபிரபந்தங் கதிநான்கிற்கறமுதலா
மொருநான்கென்னக்
கருநான்கிலினிநுழையா வீரபத்ரகவிவல்லோன்
கவின்செய்தானால்.

தஞ்சைமாநகரம்-கோட்டைக்குள்-மானோசியப்பாவீதி

வயித்தியலிங்கபிள்ளையவர்கள் குமாரர்

சாமிநாதபிள்ளையவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

கற்பவருங்கேட்பவரு மனங்களிக்கவென்போல்வார்
காசினிக்கண்
உற்பவசாகரங்கடந்து மெஞ்ஞானக்கரைகாண்டற்
கோர்சோங்காக
அற்புதஞ்சேர்வீரபத்ர நாவலவன்றஞ்சைவெள்ளை
யைங்கரற்கு
நற்பதிகம்பஞ்சரத்ந மெச்சரிக்கைகலிவெண்பா
நாட்டினானே.

உ

சிவமயம்.

தஞ்சைமாநகரம்-கீழவாசல்

வெள்ளைவிநாயகர் பதிகம்.

காப்பு.

கலிவிருத்தம்.

விண்களிக்கும் வியன்புகழ்த்தஞ்சைவாழ்
வெண்களிற்றின் விறற்பதம்போற்றுதும்
எண்களிற்ற விடர்ப்பவநீங்கியுட்
கண்களித்துக் கதிநெறிகாணவே.

நூல்.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

மணிபூத்தகடலுலகின் மாக்களென்னும்
வன்பயிர்கள்பவவெயிலில் வருந்தாவண்ணம்
அணிபூத்தமறைமுடியாம் பிரமாநந்த
வாழியையீள்புழைக்கரத்தா லள்ளிமேலாந்
திணிபூத்தநால்வாயாற் பருகிநாளுந்
திருவருண்மும்மதமாரி செழியப்பெய்யுங்
கணிபூத்ததனிமுகிலாந் தஞ்சைவெள்ளைக்
கணபதியையனுதினமுங் கருதிவாழ்வாம். (௧)

பூமேவுமெவ்வுயிர்க்கு முயிராய்நித்ய
பூரணசிற்சுகமாயற் புதமாயென்றுந்
ஆமேவுமுச்சுடராய்ச் சுருதிக்கெட்டாத்
துரியபரம்பொருளாகிச் சூட்சமாகித்

தேமேவுமலர்மணம்போற் சிட்டருள்ளிற்
சிறந்தயலற்றெஞ்ஞான்றுந் திகழாநின்ற
காமேவுவளங்கெழுநற் றஞ்சைவெள்ளைக்
கணபதியையனுதினமுங் கருதிவாழ்வாம். (௨)

மையானையுரியானை மலர்க்கணானை
மறையானைத்தொழின்மூன்றென் மருங்கிலாற்றச்
செய்யானைமலர்மாலைத் திண்டோளானைச்
செழுங்கருணைக்கடலானைச் சேக்குந்தூய
மெய்யானையௌவையினை விரைவின்முன்னாள்
வியன்கயிலைப்பதிக்கேற்றி விட்டவேழக்
கையானையரண்சூழுந் தஞ்சைவெள்ளைக்
கணபதியையனுதினமுங் கருதிவாழ்வாம். (௩)

மணந்தவழுமரைமலர்வாய் வைகுநான்கு
மாமுகனுற்றுலகுழிநன் மார்க்கமெய்துங்
குணந்தழுவாக்கயமுகனு மசுரன்சேனைக்
குலமுழுதுநொடியிலுடற் குருதிசாருன்
நிணந்தவரித்தளைபடியச் செகுத்துவிண்ணோர்
நெடுந்துயரங்களைந்தகுண நிதியென்றன்பர்
கணந்தவஞ்செய்முனிவர்புகழ் தஞ்சைவெள்ளைக்
கணபதியையனுதினமுங் கருதிவாழ்வாம். (௪)

எண்ணருஞ்சித்தாந்த மெழில்வேதாந்த
மிணையடியாவெண்டிசையு மாடையாக
விண்ணாதிபூதமைந்துங் கரங்களாக
விளங்குசெழுந்திருவருளே வடிவமாக
நண்ணாதியன்பரன்பே பணிதியாக
ஞானமணிமுடியாகச் சுடரோர்மூன்றுந்

கண்ணாகக்கொண்டிலகுந் தஞ்சைவெள்ளைக்
கணபதியையனுதினமுங் கருதிவாழ்வாம். (௫)

விண்காட்டியொலியெரிநீர் நிலனுங்காட்டி
விருப்புவெறுப்பினைக்காட்டி விளங்குமாயைத்
திண்காட்டி லுழன்றிதையந் திகையாவண்ணஞ்
சிறியேனைத்தடுத்தினிய தேன்பான்மானும்
பண்காட்டித்துதிபுரியும் பரிசுகாட்டிப்
பவநேமிகடக்கநெடும் பகடாம்ஞானக்
கண்காட்டியடிமைகொளுந் தஞ்சைவெள்ளைக்
கணபதியையனுதினமுங் கருதிவாழ்வாம். (௬)

காணவத்தைமூன்றினடுத் தோற்றம்போலுங்
கஞ்சனத்திற்பிரதிவிம்பக் காட்சிபோலுந்
தாணுவிடைக்கற்பிதமாம் புருடன்போலுஞ்
சகமனைத்துமித்தையெனுந் தகவிற்றேர்ந்து
சேணுறுநான்மறைநூலுந் தேடிக்காணாச்
சின்மயமெய்யனுபூதி தேக்குமாறு
காணவெனக்கருள்புரியுந் தஞ்சைவெள்ளைக்
கணபதியையனுதினமுங் கருதிவாழ்வாம். (௭)

மனமலருமணமலரு மருவச்சூட்டி
வழிபடுமெய்யடியவர்க்கு நன்றுதீதாம்
வினையிரண்டுஞ்சமமாக்கண் டுறுதிபூணும்
வித்தகர்க்குமவ்வவருள் வேட்டவண்ணந்
தினமுதிக்குமகண்டபரி புரணவின்பத்
திவ்யரசம்பொதிந்தசெழுங் கருணையென்னுங்
கனியுதிர்க்குங்கற்பகமாந் தஞ்சைவெள்ளைக்
கணபதியையனுதினமுங் கருதிவாழ்வாம். (௮)

சீர்மணக்கும்புலவருள மகிழ்ந்தென்னூலுஞ்
செப்பமுதற்றுதிபுரியுந் தெய்வக்கோனை
ஏர்மணக்கும்புவியைவலம் புரியச்சென்ற
விசைமணக்குமேழிசைவண் டிசைக்குநீபத்
தார்மணக்கும்புயவேலோன் வருமுன்கங்கா
தரனைவலம்புரிந்தொருமாங் கனியுண்டோனைக்
கார்மணக்கும்புதுப்பொழில்சூழ் தஞ்சைவெள்ளைக்
கணபதியையனுதினமுங் கருதிவாழ்வாம். (௯)

ஓரானைவாகனமாக் கொண்டோர்ந்தானை
யுரிபோர்த்தோன்சேயானை யொளிர்பூங்கொன்றைத்
தாரானையெமக்குணர்வு தனைத்தந்தானைச்
சடமுயிரைப்பகுத்துணராச் சழக்கர்தம்பாற்
சேரானையறிஞர்மனத் தகஞ்சேர்ந்தானைச்
செந்தமிழ்ப்பாமலர்த்தேன்பாய் திருத்தாளானைக்
காரானைமுகத்தானைத் தஞ்சைவெள்ளைக்
கணபதியையனுதினமுங் கருதிவாழ்வாம் (௧௦)

பதிகம் முற்றிற்று.

சிவமயம்.

வெள்ளைவிநாயகர் பஞ்சரத்தினம்.

காப்பு.

கலிவிருத்தம்.

பூமுகச்செல்வியைப் பொருந்துமார்பனும்
பாமுகச்செல்வியின் பதியும்போற்றுமைந்
தாமுகச்செம்மலின் றருளும்வெண்கய
மாமுகச்செம்மலை வணங்கிவாழ்த்துவாம்.

நூல்.

ஆசிரியவிருத்தம்.

பொன்னுலவுமணிமகுட மதியிதழியறுகும்
புனைந்தமுடியழகுநுதல்வெண்
பொடியழகுமிருகுழைச் செவியழகுநீளொண்
புழைக்கையொருகோட்டினழகும்
மன்னுமருண்முக்கண்ணி னழகுமந்தாரமலர்
மாலிகைத்தோள்களழகும்
மார்பின்முப்புரிநூலி னழகுமங்குசபாச
மருவுபூஞ்செங்கையழகும்
வன்னமிகுதொந்தியுத ரத்தழகுநேத்திர
மருங்கினழகுஞ்செக்கர்வான்
வடிவழகுமிருகழற் சரணழகும்விறலாகு
வாகனத்தழகுமென்றும்
மின்னிலகுமென்றனிரு கண்காணவந்தருள்செய்
வியன்மேவுதஞ்சைநகரில்
விள்ளொணாவருண்மூர்த்தி வள்ளலாய்வருசீர்த்தி
வெள்ளைவாரணமூர்த்தியே. (௧)

தேவாதிதேவர்களும் வந்தடி பணிந்திடுஞ்
செல்வக்கணதிபதியே
சிந்தனைசெய்யன்பரக மலர்மேவுதேனே
தெவிட்டாததெள்ளமுதமே
மூவாதபேரருள் கனிந்தகனியேயமல
முக்கட்செழுங்கரும்பே
முத்திக்குவித்தேயெ னன்பினுக்கன்பாய
மோனமெய்ஞ்ஞானமலையே
தாவாதபேரின்ப வாரியேவெவ்வினை
தவிர்த்தருளுமருமருந்தே
சச்சிதானந்தபர தெய்வமேயென்றுனைச்
சந்ததம்புகழவருள்வாய்
மேவாதிவருணர்பல பாவாணரும்பரவு
வியன்மேவுதஞ்சைநகரில்
விள்ளொணுவருளார்த்தி வள்ளலாய்வருசீர்த்தி
வெள்ளைவாரணமூர்த்தியே. (௨)

அன்புருகியின்பத நினைக்கவென்றாலுள
மனைக்கணமுநிற்கவில்லை
அடியருக்கின்னமு தளித்துய்யலாமென்னி
லானபொருளுதவியில்லை
இன்பமிகுமெய்த்துறவு சாரவென்றாலினு
மிகத்தாசையொழியவில்லை
இயலுமறைநூலுணர்ந் தொருநான்குசாதன
மிசைந்துடலையானெனதெனும்
வன்பகன்றபரோட்ச நிட்டைகூடிடவென்னில்
வல்வினைகளொக்கவில்லை

மைந்தனேனித்துன்ப வாரிதிகடந்தின்ப
மன்னுகரைசேர்வதற்குன்
மென்பதப்புணையன்றி வேறுகதிகாண்கிலேன்
வியன்மேவுதஞ்சைநகரில்
விள்ளொணுவருளார்த்தி வள்ளலாய்வருசீர்த்தி
வெள்ளைவாரணமூர்த்தியே (௩)

வையகத்துறைவோரும் வானகத்துறைவோரும்
வன்பிலத்துறைவோருநின்
மலரடிதுதித்தனந் தஞ்சித்தியெய்தியதை
மைந்தனேன்கேட்டுணர்ந்திங்
கையமறவென்குறை யனைத்துநின்றிருமுன
மறைந்துமுறையிடவுநின்ன
தகமகிழ்ந்தருளா திருப்பதற்கேதெனை
யபக்குவனெனக்குறித்தோ
பொய்யருக்குறவாய் விளங்குமிக்கலியுகப்
புதுமையோமுதியோர்களெப்
போதுமுனைவிக்கின மகற்றிடுந்தேவெனப்
புகலுமொழிபொய்யாமலென்
வெய்யவினையைப்பரித் துய்வருளலுன்பாரம்
வியன்மேவுதஞ்சைநகரில்
விள்ளொணுவருளார்த்தி வள்ளலாய்வருசீர்த்தி
வெள்ளைவாரணமூர்த்தியே. (௪)

பெண்ணகிலமாசையெனு முக்காதலற்றுணர்வு
பெற்றுளோர்பற்றுமுறவாய்ப்
பேசுமறையந்தாத் தொளிர்சுயஞ்சோதியாய்ப்
பிரணவப்பொருணிதியாய்

நண்ணரியதுரியமாய் மன்னுதுரியாதீத
நாதாந்தமோனவெளியாய்
ஞாலமுழுதாட்டுமொரு மூவர்க்குமூலமாய்
ஞானவாநந்தநிறைவாய்
எண்ணுறுமனமொழிக் கண்ணுணுவண்ணமா
யிலகுநின்கருணைவடிவை
எவ்வண்ணநின்னதரு ளன்றியோர்ந்துய்குவே
னிகலுமுப்புரமெரிதர
வெண்ணகைபுரிந்தகனல் வண்ணனருளண்ணலே
வியன்மேவுதஞ்சைநகரில்
விள்ளொணுவருளார்த்தி வள்ளலாய்வருசீர்த்தி
வெள்ளைவாரணமூர்த்தியே. (ரு)

வாழி.

கலிவிருத்தம்.

வாழ்கவடியார்தஞ்சை மாநகரும்வாழ்க
வாழ்கவிடைவாகனனு மாதுமையும்வாழ்க
வாழ்கமறைவெள்ளைவய மாமுகனும்வாழ்க
வாழ்கவடியேன்றமிழும் வையகமகிழ்ந்தே.

பஞ்சரத்தினம் - முற்றிற்று.

சிவமயம்.

வெள்ளைவிநாயகர் எச்சரிக்கை.

காப்பு.

வஞ்சித்துறை.

வெள்ளை வாரணப்-பிள்ளை யார்கழல்
உள்ளு வார்சுகங்-கொள்ளு வார்களே.

நூல்.

சிருலாவிய தஞ்சைமேவிய சித்திவெள்ளை விநாயகா
ஏருலாவிய ஆகுவாகனத் தெந்தையே எச்சரிக்கை (௧)

நித்தனேபரி சுத்தனேவிக்கி னேசனேபிர காசனே
முத்தனேவெள்ளை யத்திமாமுக மூர்த்தியே எச்சரிக்கை (௨)

காரணுபரி பூரணவுயர் கதியேசுரர் பதியே
ஆரணுகமம் புகழ்வெண்கரி யானனு எச்சரிக்கை (௩)

போதனேபிரக் யாதனேயரும் பொருளேதிரு வருளே
நீதனேவெழிற் போதகானன நின்மலா எச்சரிக்கை. (௪)

மணியேநிறை யணியேசுக வடிவேமறை முடிவே
எணியோர்க்கருள் புரியோர்மருப் பிறைவா எச்சரிக்கை. (௫)

ஒளியேபெரு வெளியேமுத லுருவேபர குருவே
களியேறடி யவர்போற்றுமைங் கரனே எச்சரிக்கை. (௬)

மதியேயிரு நிதியேயுமை மகனேகரி முகனே
விதியார்வியன் பதியார்புகழ் விமலா எச்சரிக்கை. (௭)

திருவேயரு வுருவேசெழுந் தேனேயருட் கோனே
கருவேரறுத் தருள்வெண்மத கயனே எச்சரிக்கை. (௮)

மகவான்சதுர் முகவானெடு மாலோன்புகழ் மேலோன்
மகவாய்வரு முகவாரண மகிபா எச்சரிக்கை. (௯)

ஒளியார்மணி யணிநூலணி யுரனேபுழைக் கரனே
அளியார்மலர்த் தொடைசூடிய வழகா எச்சரிக்கை. (௧0)

சுகமேதொண்ட ரகமேவிய சுடரோயருட் கடலே
இகமேயெனக் கருள்வெண்களிற் றிறையே எச்சரிக்கை. (௧௧)

அண்டர்போற்றிடுந் தண்டைசேர்மல ரடியாமணி முடியா
தொண்டனேற்கரு டந்திமாமுகத் தோன்றலே எச்சரிக்கை.()

பாசாங்குச தரனேகண பதியேகுண நிதியே
நீதசார்பரம் பரனேயருள் செய்வா யெச்சரிக்கை. (௧௩)

அற்புதாவிரு பொற்பதாசரு வாதராகுகன் சோதரா
நற்பராபர வற்பெனக்கரு ளுபகா எச்சரிக்கை. (௧௪)

வம்புவார்குழல் வல்லபைமண வாளனேசதுர்த் தோளனே
நம்புவார்க்கருள் தஞ்சைவெள்ளை விநாயகா எச்சரிக்கை.(௧௫)

புத்தியும்புகழ் வித்தையும்மிகு பொருளும்நிறை யருளுஞ்
சித்தியுந்தரு மத்திமாமுகச் செல்வனே எச்சரிக்கை. (௧௬)

எச்சரிக்கை முற்றிற்று.

சிவமயம்.

வெள்ளைவிநாயகர் கலிவெண்பா.

காப்பு.

நேரிசைவெண்பா.

சுத்தமணி மாடமிலாச் சூழ்தஞ்சை மாநகர்வாழ்
வித்தமணி வெள்ளை விநாயகா—இத்தருணங்
காதலித்துன் சீராக் கலிவெண்பா வாற்றமியேன்
ஓதவருள் செய்வா யுவந்து.

நூல்.

கலிவெண்பா.

பார்மேவு தொண்டர்களும் பண்ணவரும் விண்ணவரும்
பேர்மேவு நான்குமுகப் பெம்மானுஞ்—சீர்மேவுஞ்

செய்யா ளுரத்துறையுஞ் செந்தா மரைக்கணனும்
பொய்யாத நான்மறைதேர் புண்ணியருந்—துய்யபரி

பூரணமே மோனப் பொருளே யருள்வெளியே
காரணமொன் றில்லாமெய்க் காட்சியே—ஆரணத்தின்

சென்னிமிசை வீற்றிருக்குஞ் சிந்தா மணிவிளக்கே
தன்னிகரற் றோங்குந் தயாநிதியே—உன்னுமன

—ாக்குங் கடந்தபர வஸ்துவே முத்தருளந்
தேக்குமறி வானந்தத் தெள்ளமுதே—நோக்கரிய

ஒன்றே யருவே யுரு[illegible] யுமாஞானக்
குன்றே யணு[illegible]வ குணகரமே—குன்றுத

தேங்குஞ் சுகோததியே தெய்வப் பெரும்பதியே
ஓங்கும் பிரணவத்திற் கோருயிரோ—நீங்கலிலாப்

பேரொளியே யன்பிற் பிறங்கியெழு முள்ளொளியே
சாரொளி கட்கெல்லாந் தனிநிலையே—பேருருவாங்

கற்பனைதீ ருண்மைக் கதியே யெனத்தினமுஞ்
சொற்பரவும் பற்பலவாந் தோத்திரங்கள்—அற்புதமா

ஆற்று முருவநிரா காரமுந்தன் வண்ணமெனத்
தோற்றுவிக்கு நின்றுட் டுணைமலருந்—தேற்றமிகுஞ்

சத்துவத்தாற் செய்யுந் தருமபரி பாகமதால்
..த்தனையின் கண்ணே விருவினைகள்—ஒத்துறையுஞ்

சுத்தவுயிர் தம்மைநம்பாற் சூழவப்பே மென்றெவர்க்குஞ்
சித்தமுறக் காட்டுஞ் செயமேன்றப்—புத்தமுறுந்

துன்னிழைசேர்ந் தொன்றுய தூயவெழிற் பட்டாடை
மன்னியொளி ராற்றன் மருங்கழகும்—உன்னதஞ்சேர்

ஆவா முயிர்க்குங்குவ் வாஞ்சகத்தி னுக்குமுதற்
றேவாய் நடாத்திநிற்குஞ் சீர்தோன்ற—மூவாத

ஆகென் றுரைக்கு மபிதானம் பெற்றுயரோர்
வாகனத்தி லூர்ந்துணர்த்தும் வண்மையையும்—மாகமுதல்

எல்லா முதித்திருந்தோய் வெய்துவதென் றுனமெய்ப்
பல்லார்க்குங் காட்டும் பருவயிறும்—மல்லாடுந்

தானவனை முன்னுட் சடையறுத்துச் சந்ததமும்
வானவரை வாழ்வித்த வண்ணம்போல்—மானிலத்தில்

நிச்சமுமுன் றக்கரத்தை நேமமுட னோ...ாய்
உச்சரிப்போ ருட்பகையா மோர்மூன்றும்—மி..சமறத்

தேய்த்தருளுஞ் சீர்த்தி தெரிக்கத் தவளநிறம்
வாய்த்திலகு முப்புரிநூன் மார்பழகுந்—தூய்த்தவெழிற்

பண்புறுபூ மாலையொடு பாமாலை யுஞ்சேர்த்து
நண்புறவேய்ந் தட்குழைந்து நாடோறுங்—கண்படரும்

பூலோகத் தின்கண் புனிதமுடன் போற்றுவர்க்குச்
சாலோக மாதி சதுர்ப்பதமும்—மாலோயத்

தந்தளிப்பே னென்னுந் தகவுணர்த்தக் காட்டுமப
யந்தரித்த வோர்நான் கருட்கரமும்—அந்தரஞ்சேர்

கார்மேக மோருருவாய்க் கார்வளைமீ தந்தியதாங்
கேர்மேவு மாபகட்டி லேறியே—பார்மாந்தர்

கண்டெம்போ டுண்ணடுங்கக் கையிற் கொடும்பாசந்
தண்டு கணிச்சி தமைத்தாங்கி—அண்டபகி

ரண்டம் விதிர்க்கவிளை வாச்சினந்து சுற்றுமிரு
கண்டலத்தில் வன்னிக் கதிர்சிதர—மண்டிவருங்

காலனணு காதடியார்க் காப்பே னெனவுணர்த்துங்
கோலநெடும் பாசாங் குசத்தழகும்—சீலநிறை

ஒளவையனை முன்னோர்போ தங்கயிலை யங்கிரிமேற்
செவ்வையுற வேற்றிவைத்த தீரம்போற்—கவ்வரிவை

அத்தநில மூவாசை யற்றதனுக் குக்குறியா
அத்தனடிக் கன்போ டகமுகந்து—வித்தமிய

மானனுட னம்மிலபி மானமகன் றிம்மூன்றுங்
ஞானமென வன்னோற்குத் தத்தஞ்செய்—தீனமுறும்

எப்பணியு நீத்தவ் விறையோ னடிப்பணியே
மெய்ப்பணியென் றுன்னி விரைந்துசெயும்—ஒப்பரிய

மாதவரை யெஞ்ஞான்றும் வாழுந் துரியமெனும்
போதவரை யேற்றும் புழைக்கரமும்—ஆதிமறை

ஓதுமொழி நான்கினுக்கு மொன்றே யருத்தமெனும்
நாதமுடி வைக்காட்ட நால்வாயென்—றேதமிலாப்

பேர்வாய்ந்து நாளும் பிரவாள மன்னவிதழ்
ஓர்வாயைக் காட்டு மொழுங்கினையும்—பார்வாய்நீள்

அம்மைதரு மும்மலமா மள்ள லறக்கழுவிச்
செம்மையடி யார்க்கருளுஞ் சீர்காட்டச்—செம்மணியாம்

மாமலைமே னின்றொழுகும் வாரருவி போற்பொழியுங்
காமர் மதம்பாய் கவுட்டுணையும்—வாமமொடு

கூறும் பலசமயக் கூட்டமெனும் பேரிருளைத்
தேறு மபவாதச் சித்தொளியான்—மாறுபடும்

வண்ணந் தகர்த்து வளமேவு மத்துவிதத்
திண்ணந் தனைவிளக்குஞ் சீர்தோன்ற—வெண்ணிலவுக்

கற்றைவிரித் தத்திரண்டு காட்டுந் திறல்வாய்ந்த
ஒற்றை மருப்பி னொளியழகும்—அற்றமறத்

தொல்லுலகின் மும்மைத் தொழில்புரிய மூவருக்கும்
வல்லமையை நல்கும் வகையுணர்த்த—எல்லையிலாச்

சுத்த வொளிபரப்பித் தோன்றும் புகழ்சான்ற
மெய்த்த கருணை விழிமூன்றும்—தத்துவங்கள்

ஆறு றையுமோர்ந் தறியு முயர்சாட்சிப்
பேருகி நிற்கும் பெருமையினைக்—கூறுமற்

கூறும் பொருட்டோர் குறியாம் பெயா[illegible]
மாறுபடா வெண்கரியின் மாமுகமும்—வீறுப[illegible]ம்

வாக்குமன மொன்றாய் வழுத்து மொருநால்வர்
தாக்கு மதுரத் தமிழ்மொழியுஞ்—சேக்குழகக்

கிள்ளைமொழி யைச்செவியிற் கேட்டதுபோல் வெய்யகரும்
பிள்ளைமொழி யத்துணிந்த பெற்றியெனத்—தெள்ளுதமிழ்

ஓதியுணர் மூதறிஞோ ரொண்கவிக ளிற்சிறிதைக்
காதளவாக் கேட்டுமிகக் கற்றவன்போல்—ஓதெளிய

என்போல்வார் சொல்லு மிதஞ்சா றளாயெனப்பே
ரின்போடு கேட்கு மிருசெவியுந்—தென்பாயுஞ்

சச்சிதா னந்தமெனச் சாற்றுந் திரிவிதமாம்
அச்சுருவா யோங்கு மடைவதனை—உச்சிதமாஞ்

சாதனங்க ளோர்நான்குஞ் சார்ந்தபரி பக்குவர்க்குப்
போதவறி விக்குநுதற் புண்டரமும்—மேதினிக்கண்

செப்பும் பலவுயிர்க்குந் தெய்வ மனைத்தினுக்கும்
எப்பொருட்கு மாதி யிறையோனாய்ச்—செப்பரிய

சித்திபுத்தி யென்னுமிரு தேவிமார் தற்சூழ
முத்தியுலக முழுவதுந்தன்—சத்தையினால்

ஒன்றுமர சாட்சி யியற்றிநிற்கு முண்மையினை
இன்றடியா ரிங்ங னினிதுணரத்—துன்றுமருள்

மின்னொளியாற் காட்டுமெழில் வீசு நவமணிகள்
மன்னு மகுட மணிமுடியும்—நன்னயமாக்

கண்டடியே னுள்ளங் களிகூர்ந் தனவரதந்
தண்டமிழா னின்சீர் தமைப்பாடித்—தொண்டரொடு

கூடி யுடல்மூன் [illegible] காசமைந்திற் கன்னியமாய்
ஈடியலு முன்னிலைச்சுட் டின்றியுனை—நாடியுயர்

அத்துவித மோன வபரோட்ச நிட்டைபெற்று
நித்தியமு நிற்கு நெறியருள்வாய்—மொய்த்தமணி

முத்தநதி நீரு முருகார் மலர்ப்பொழிலிற்
றத்து நறவுந் தடம்பணைவாய்—ஒத்தேறி

நேசமுறப் பாய்ந்து நிரவுதலா லெக்காலும்
மாசகன்று செந்நெல் வளம்பெருகிப்—பூசுரர்சொல்

வேதத் தொலிகளுந்தோல் வெம்பே ரிகைமுழவின்
நாதத் தொலிகளும்விண் ணுடுறவெப்—போதுமதிர்

ஆர்த்திபெறுந் தஞ்சைநகர்க் கீழைவா யிற்கணெழில்
சேர்த்தபுக ழன்பர் செழுமலர்கள்—சாத்திநிதஞ்

சேவிக்கும் வண்ணந் திருமூர்த்தங் கொண்டெழுந்த
தேவிற் சிறந்தபர தேசிகா—தூவெள்ளை

வண்ணவறி விற்கும் வகர இகரமெனும்
நண்ணுமறி யாமைக்கு நாயகமாம்—உண்மை

நிலையாய் விளங்கிநிற்கும் நேயமதைக் காட்டத்
தலையாய நாமமெனச் சாலுங்—கலையாய்ந்த

மெய்யறிஞோர் வெள்ளை விநாயகனென் றேத்தெடுப்பச்
செய்யபெயர் பூண்டிலகுந் தெய்வமே—வையகத்திற்

சூழுந் தகைபூத்த தொண்டரொடு நீடூழி
வாழியநின் பொற்றாண் மலர்.

கலிவெண்பா முற்றிற்று.